Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 2, January 2023** **E-ISSN: 2583-0481**

# Transforming Rituals

**Dr. E. Sharon Christiyana,** Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-1761-6429**
**DOI: 10.5281/zenodo.7583995**

## Abstract

*Customs and traditions are an inevitable part of human life. The traditions, customs, and cultural practices change according to the locality and get influenced by migration. Besides, they are also being adopted and made flexible according to the context. Ritual is an unconscious part of human life. Women are indeed the only ones who can perform the rituals with the greatest commitment. Women are popular in almost every aspect of Tamil society. Rituals can be an activity in a person's personal life, family, village or race. It seems that the wishes of the human mind have been transformed into rituals. These rituals are passed down from time to time by ancestors. They are updated by society in each period according to the location of man. This article analyses the Tamil customs and traditions that follow the rituals in detail.*

**Keywords:** Rituals, Regulations, Circumstances, Culture, Migration, Transformation.

## References

[1] Bakthavathsala Bharathi. *Thamizhar Maanidaviyal*. Adaiyalam, Trichy, Second Edition, 2008.

[2] Ilampooranar. (UA). *Tholkappiyam – Porulathigaram*. Saiva Siddhantha Nool Pathippu Kazhagam, Chennai, 1953.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# உருமாறும் சடங்குகள்

**எ. சாரோன் கிறிஸ்டியானா**, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-1761-6429
DOI: 10.5281/zenodo.7583995

## ஆய்வுச்சுருக்கம்

*மனிதனுடைய வாழ்வில் முக்கியப் பங்கு வகிப்பது சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஆகும். மனித சமூகத்தால் காலம்காலமாக உருவாக்கப்பட்டு மரபு வழியாக பின்பற்றப்படும் சடங்குகளும், விதிமுறைகளும் சூழ்நிலை கலாச்சார மாறுதல், இடச்சூழல், இடம்பெயர்தல் ஆகியவற்றைப் பொறுத்து சற்று தளர்த்தப்பட்டு உருமாற்றம் பெறுகின்றது என்பதை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** சடங்குகள், விதிமுறைகள், சூழல்கள், கலாச்சாரம்,, உருமாற்றம்.

## முன்னுரை

சடங்கு மனிதனுடைய வாழ்வில் தனக்கே தெரியாமல் ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது. சடங்குகளை மிக அதிகமாக ஈடுபாட்டுடன் செய்யக்கூடியவர்கள் பெண்கள் மாத்திரமே என்பது உண்மை. பெண்கள் சமுதாயத்தில் காணப்படும் அனைத்துக் காரியங்களிலும் புகழ் பெற்றிருக்கின்றனர். ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அமைந்ததொரு செயலாகவோ, குடும்பமாகவோ, ஊராகவோ, இனமாகவோ சடங்குகள் அமையும். மனிதனின் எண்ணத்தின் வேண்டுதல்களே சடங்குகளாக உருமாற்றம் பெற்றிருக்கின்றன எனலாம். காலம்காலமாக முன்னோர்களால் மரபு வழிப்பட்டு வழித்தோன்றலாக இச்சடங்குகள் அமைகின்றன. அவை, ஒவ்வொரு காலக்கட்டத்திலும், மனிதனது இருப்பிடத்தைப் பொருத்து சமூகத்தால் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றன. மனிதனுள் எண்ணற்ற பண்பு நலன்களும், ஒற்றுமையும் சடங்குகள் வாயிலாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன. வழிபாடுகளில் நம்பிக்கை கொண்டவர்களாக சடங்குமுறைகள் இன்றும் பல்வேறு விதங்களில் செய்யப்படுகின்றன. நம்பிக்கை என்பதற்கு விசுவாசம், ஆணை, நம்பியொப்படைப்பு, உண்மை, சத்தியம், நிசம், உறுதிப்பாடு என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருள்களைத் தெரிவிக்கின்றது.

Faith, Belief என்ற இரண்டு ஆங்கிலச் சொற்களுக்கும் தமிழில் நம்பிக்கை என்ற ஒரே பொருள் உள்ளதாக ஆங்கில அகராதிகள் உணர்த்துகின்றன. நம்பிக்கைகள் எக்காலத்தில் தோன்றின? என்பதனை யாராலும் கண்டறிந்து கூற இயலாத அளவிற்கு மிகவும் தொன்மையான மரபு வழிப்பட்டது. நம்பிக்கையின் வாயிலாக மனிதன் இயற்கையையும்,

இயற்கை சார்ந்த பொருட்களையும் வணங்கத் தொடங்கினான். இயற்கையினால் தனக்கு கேடு விளையும்போது அவற்றை வணங்கி வழிபாடு செய்யும்போது சடங்குகளும் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். மனிதன் நம்பிக்கையின் காரணமாக, என்று வழிபாட்டினை நிகழ்த்தினானோ, அன்றே சடங்குகளும் தோற்றம் பெற்றிருக்கின்றன. சடங்குகளும் தனியாகவோ, குடும்பமாகவோ அல்லது சமுதாயத்தோடு சேர்ந்து செய்யக்கூடியதாக அமைகின்றன.

**சடங்குகள்**

சடங்கு (Ritual) என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல்முறைகளின் தொகுப்பு என்றும் முன்னோர் பின்பற்றிய வழியில் மரபு வழியாகச் செய்யப்படும் சிறப்பு நிகழ்வு என்றும் குறிப்பிடப்படுகின்றது. இச்சடங்குச் செயல்பாடுகள் ஒழுங்கான கால இடைவெளியிலோ, குறிப்பிட்ட சமயங்களிலோ, அவரவர் விருப்பப்படியோ நிகழ்த்தப்படுகின்றன. அதற்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் மட்டுமின்றி அனைத்து இடங்களிலும் நிகழ்த்தப்படும் சுதந்திரப் போக்கினைக் கொண்டதாகச் சடங்குகள் திகழ்கின்றன.

> **சடங்குகள் சமூகச் சூழல்களில் நிகழ்த்தப்படுவது என்பதும், சமூக நிகழ்வுகளாகவே நிகழ்த்தப்படுவது என்பதும், அவை சமூகப் பொருண்மைகளாக அமைகின்றன என்பதும் சடங்கின் தொன்மையான தன்மைகள் என்கிறார் எட்மண்ட் லீச். அதுமட்டுமல்லாமல் சடங்குகள் சமூகத்தின் விருப்பத்தினைத் தெரிவிப்பதாகவும் இந்த விருப்பம் கூட்டுமனம் சார்ந்ததாகவும் அமைகின்றன. (பக்தவத்சல பாரதி, ப. 189)**

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள பருவ மாற்றங்களுக்கு ஏற்பச் சடங்குமுறைகள் அவை நிகழ்த்தப்படும் மக்களால் முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மனித வாழ்வில் சடங்குகள் ஒரு குறிப்பிட்ட சூழலில் தொடர்ந்து நடைபெற்றும், காலமாற்றம், நாகரீகத்திற்கு ஏற்றாற்போல மாறிக் கொண்டும் வந்துள்ளன. தொன்மைக்கூறுகளைத் தன்னகத்துக் கொண்ட இச்சடங்குகள் மனித வாழ்வில் ஏற்படுகின்ற சுக, துக்கம் சார்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் செய்யப்படுகின்றன.

**“மனித வாழ்வின் ஒவ்வொரு நிலைமாற்றமும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு வயப்படுகின்றது அல்லது சடங்கு வயப்படுத்தப்படுகின்றது” பக்தவத்சலபாரதி: 2008: ப.203**

சடங்குகள் மனிதனின் கால ஓட்டத்தோடு இணைந்த பிறப்பு, இறப்பு போன்ற சுழற்சித் தன்மையுடன் கூடியதாக அமைகின்றன. இந்த சுழற்சிக்கு இடையில் உள்ள காலத்தில் இளமை, பருவமடைதல், முதுமை என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் சடங்குகள் அமைகின்றன. இவை மக்களின் வாழ்வியல் அனுபவங்களோடு பின்னிப் பிணைந்து வாழ்வியலை ஒழுங்கமைக்கின்றன.

சடங்குமுறைகள் ஆண், பெண் என்று வேறுபாடுகளுடன் நடைபெறுகின்றன. ஆண்கள் மட்டும் செய்யும் சடங்கு, பெண்கள் மட்டும் செய்யும் சடங்கு என்று

பிரிக்கப்படுகின்றன. சடங்குகளில் பெண்கள் அதிக அளவிலும், ஆண்கள் சில சடங்குகளிலும் ஈடுபட்டுள்ளனர். கிராமத்துப் பெண்கள் இவற்றை செய்வதில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால், இன்று நகரங்களில் சில இடங்களில் ஆண், பெண் என்ற பேதமின்றி அனைத்து விதமானச் சடங்குகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சடங்குகள், தம் காலச்சூழலுக்கு ஏற்ப மக்களால் சிறிது மாற்றம் பெற்றுகொண்டே இருக்கின்றன.

பழங்காலம் தொட்டு இக்காலம் வரை சடங்கு ஒவ்வாரு மனிதனாலும் கடைபிடிக்கப்பட்டாலும், சமூகத்தின் விருப்பத்தின் அடிப்படையில் சடங்குகள் செய்தாலும், சிறிது மாற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. நகர்புற மக்களிடையேயும், கிராமப்புற மக்களிடையேயும் கடைபிடிக்கப்படுகின்ற சடங்கு முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குழந்தை பிறப்பு முதல் வயதானவர்கள் வரைக்கும் எத்தனையோ விதமான சடங்குகளில் மாற்றம் பெற்றிருக்கின்றன.

**சடங்குகளில் மாற்றம்**

சடங்குகள் மனிதரின் வாழ்வில் பலவாறகப் பரந்துகிடப்பினும் இவை எல்லாவற்றிற்கும் பொதுவான அம்சம் உண்டு அதாவது சடங்குகளின் குறியீட்டுத் தன்மையானது அச்சடங்கை நிகழ்த்துவரால் தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்படுவது அல்ல. இது சமயம்,சமூகம் போன்ற வெளிச்சக்திகளினால் வாதிக்கப்படுகின்றன அல்லது மரபு வழியாகப் பெறப்படுகின்றன.

நகர்ப்புறம், கிராமப்புறம் இரண்டிலும் சடங்குமுறைகள் மாறுபட்டுக் காணப்படுகின்றது. மாமன் மடியில் அமர வைத்து காதுகுத்தும் பழக்கம் இன்றையக் காலக்கட்டத்தில் அதிகமாக இருப்பதில்லை. அழகு நிலையம் சென்று மொட்டை போட்டு காதுகுத்தும் வழக்கம் இன்றையச் சூழ்நிலையில் கலாச்சாரத்தினால் சடங்குமுறை மாறுதல் அடைந்து கொண்டு வருகின்றது.

கிராமத்தில் ஒரு பெண் பூப்பெய்திவிட்டால், அவள் வெளியில் வருதல் கூடாது. பெண் பூப்பெய்தியவுடன் தாய் மாமனால் செய்யப்படும் சிறு குடிசைக்குள் அமர வைக்கும் வழக்கம் காணப்படுகிறது. அப்பெண்ணுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் குடிசைக்குள் வைக்கப்படும். பூப்பெய்தியப் பெண் அணிந்திருந்த உடையினை சலவை செய்பவரிடம் கொடுக்கப்படுகின்றது. கிராமப்புறத்தில் இச்சடங்கு முறைகள் இன்றும் நடைபெறுகிறது. நகர்புற மக்களிடையே இந்தச் சடங்கு முறைகள் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. பூப்படைந்தப் பெண்ணை குடிசைக்குள் தனியே அமர வைப்பது கிடையாது. சூழல், இடம் எல்லாம் மாறுபட்டுள்ளதால், அதற்குத் தகுந்தாற்போல சடங்குகளிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. அவற்றையும் சமூகம் ஏற்றுக்கொள்கிறது.

பொங்கல் விழாவின்போது கிராமத்தில் எல்லா மக்களும் அவரவர் வீடுகளின் வாசலில் குலவைச்சத்தம் இட்டு பொங்கல் வைக்கின்றனர். இதில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவரும் சேர்ந்து பொங்கல் வைக்கும் வழக்கம் அனுசரிக்கப்படுகின்றது. சில இடங்களில் பொங்கல் வைப்பது நேர்த்திக் கடனாகவும் செய்யப்படுகிறது. ஆனால், நகர்ப்புறத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் பொங்கல் வைக்கும் வழக்கம் இன்றும் நிலவுகின்றது. இதிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. வாசலில் வைப்பதும், குலவையிடுவதும் இல்லை. தனியே பொங்கல் வைத்து சிறப்பிக்கிறார்கள். நகர்புறத்தில் மாட்டுப் பொங்கல் என்ற சடங்கு முறைகள் அனுசரிக்கப்படுவது கிடையாது. அது சிரமமும்கூட. இவற்றை நகர்புற சமூகமும் ஏற்றுக்கொள்கிறது. மார்கழி மாதத்தில் முதல் நாள் தொடங்கி இறுதிவரையிலும் பக்தியோடு கண்ணனை வணங்கும் வழக்கம் காணப்படுகின்றது. இந்நாட்களில் பெண்கள் நோன்பு மேற்கொள்வர். இம்மாதத்தில் அதிகாலையில் எழுந்து, நீராடிவிட்டு, கோயிலுக்கு சென்று இறைவனை வழிபடுவர். ஆனால், நகர்ப்புற வாழ்க்கையில் நாகரீக வளர்ச்சிக்கு தகுந்தாற்போன்று வீட்டிலேயே எழுந்து நீராடிவிட்டு தங்களுடைய நோன்பினை மேற்கொள்கின்றனர். இறப்பு நடந்த வீட்டில் கிராமப்புறத்தில் இறந்தவர்க்கு வாய்க்கரிசி போடுதலில் தொடங்கி, உறவுகள் ஒன்றுகூடி பல சடங்குகள் செய்யும் வழக்கமும், முப்பது நாட்கள் கழித்து கருமாதி என்று அவரவர் இன அடிப்படை வழக்கத்தில் காலங்காலமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நகர்புற மக்களிடத்தில் இந்தச் சடங்குமுறைகள் மூன்று நாட்களில் எல்லாம் முடித்துவிட்டு அவரவர் இருப்பிடத்திற்கு சென்று விடுகின்றனர். இவ்வாறு கிராமம், நகரம் இரண்டிலும் சடங்கு முறைகள் இன்றையக் காலக்கட்டத்திலும் சற்று வேறுபட்டே காணப்படுகின்றன.

**முடிவுரை**

நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் சடங்குமுறைகள் கையாளப்பட்டு வந்தாலும், பண்டைக் காலத்திற்கும், இக்காலத்திற்கும் சடங்குகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நகர்ப்புறத்தில் தமது கலாச்சாரத்திற்கு தகுந்தாற்போல சடங்குகள் மாற்றம் பெறுகின்றன. மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்திற்குத் தகுந்தாற்போல மாற்றிக் கொண்டுள்ளனர். நகரத்துப் பெண்கள் பூப்பெய்துவதை உடம்பில் ஏற்படக்கூடிய ஒரு மாற்றமாக எடுத்துக் கொள்வர். கிராமத்துப் பெண்களிடையே இதை தீட்டு என்று அச்ச உணர்வோடும், பயத்தின் உணர்வோடும் பெண்கள் ஒவ்வொரு மாதமும் இவற்றைக் கடந்து செல்லுகின்றனர். கிராமத்தில் பெண்களை குடிசைக்குள் அமர வைப்பதுபோல், நகரப்பகுதிகளில் காலச்சூழல், இடச்சூழல், வாழ்க்கை ஓட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கடைபிடிப்பது சிரமமாக இருப்பதால் சடங்கு முறைகளில் ஏற்படும் மாற்றத்தை சமூகம் ஏற்றுக் கொள்கிறது. பொங்கல் விழாவின்போது ஊர் மக்கள் அனைவரும் கூடி ஒன்றுதிரண்டு பொங்கல் வைக்கும்போது சமத்துவ உணர்வும், ஒற்றுமையும் வளர்ந்தோங்குகின்றது. ஆனால், நகர்ப்புறத்தில் இடச்சூழல், வர்க்க வேறுபாடு, வாழ்வாதாரத்திற்காக தன் இனத்திலிருந்து இடம் பெயர்ந்தமை

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

போன்ற காரணங்களால் இம்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. சடங்குகளையும் விதிமுறைகளையும் இறைநம்பிக்கையின் காரணமாக உருவாக்கிய மனித சமூகம் சூழ்நிலைகளாலும், கலாச்சார மாறுதல்களாலும், இடச்சூழல்களைப் பொறுத்தும், சடங்குகளும் அதன் விதிமுறைகளும் சற்று தளர்க்கப் பெற்று, உருமாற்றம் பெறுவதை ஏற்றுக் கொள்கிறான். பிற்காலத்தில் மேலும் பல உருமாற்றங்களைக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதை இவ்வாய்வு கட்டுரையின் மூலம் அறியலாம்.

**குறிப்புகள்**

[1] பக்தவத்சலபாரதி. தமிழர்மானிடவியல். அடையாளம், திருச்சி, இரண்டாம்பதிப்பு, 2008.
[2] இளம்பூரணர். (உ.ஆ.). *தொல்காப்பியம் – பொருளதிகாரம்.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.